மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சி.வி.எம்.பி. எழிலரசன் அவர்கள்.

திரு. சி.வி.எம்.பி. எழிலரசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில், சென்னையிலிருந்து காஞ்சிபுரத்திற்கு அன்றைய போக்குவரத்துத் துறை அமைச்சராக இருந்த அண்ணன் திரு. கே.என். நேரு அவர்களால் குளிர்சாதன வசதி செய்யப்பட்ட தடம் எண் 576 AC bus இயக்கப்பட்டது. அது கடந்த 10 ஆண்டுக் காலமாக நிறுத்திவைக்கப்பட்டிருக்கின்றது. மீண்டும் அந்தப் பேருந்தை காஞ்சிபுரத்திற்கு இயக்குவதற்கு அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தலைவர் கலைஞர் அவர்கள் ஆட்சியில் இயக்கப்பட்ட பேருந்துகளில் கிட்டத்தட்ட 340–க்கும் மேற்பட்ட வழித்தடங்கள் கடந்த அ.தி.மு.க. ஆட்சியில் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கின்றன. அவை பரிசீலிக்கப்பட்டு, 200–க்கும் மேற்பட்ட வழித்தடங்களில் மீண்டும் பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. எனவே, மாண்புமிகு உறுப்பினர் திரு. எழிலரசன் அவர்கள் குறிப்பிட்ட அந்த வழித்தடத்திலும் தேவைப்படின் பேருந்துகளை இயக்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 249, மாண்புமிகு உறுப்பினர் திரு. JMH. அசன் மௌலானா, மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

249—

திருத்தேரைப் புனரமைத்தல்

***730—திரு. JMH. அசன் மௌலானா:**

மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2022 மே 9]

(அ) வேளச்சேரி தொகுதி, திருவான்மியூர், அருள்மிகு மருந்தீஸ்வரர் திருக்கோயில் திருத்தேரைப் புனரமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) மருந்தீஸ்வரர் திருக்கோயிலுக்கு ஏற்கெனவே ரூ.6 கோடி செலவில், 2006 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட தங்கத் தேர் நல்ல நிலையில் உள்ளது. அதேபோல், ஏற்கெனவே 35 அடி உயரம் கொண்ட ஒரு திருத்தேர் சுப்பிரமணியர் சுவாமியின் பயன்பாட்டிற்கு உள்ளது. புதிதாக ரூ.1 கோடியே 60 இலட்சம் செலவில் 45 அடி உயரமும், 16 அடி அகலமும் கொண்ட திருத்தேர் அமைப்பதற்கான மதிப்பீடுகளும் தயார்; உபயதாரரும் தயார்; ஆணையாளர் அவர்களுடைய அனுமதிக் கடிதமும் தயார். ஆகவே, உடனடியாக புதிய தேர் அமைப்பதற்குண்டான பணிகள் விரைவில் தொடங்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. JMH. அசன் மௌலானா அவர்கள்.*

முற்பகல் 11–10

திரு. JMH. அசன் மௌலானா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ரமலான் மாதத்தில் இஸ்லாமியர்களை அழைத்து, இப்தார் நிகழ்ச்சியைக் கொடுத்த, நாங்கள் நலிவடைந்த நிலையில் இருக்கும் நேரத்தில் எங்களுக்குத் தோள் கொடுத்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு* 'Stalin is your friend at bad times' *என்ற அடிப்படையில், எங்களுக்கு உற்ற நண்பனாக இருக்கும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மருந்தீஸ்வரர் கோயில் ஏழாம் நூற்றாண்டில் உருவாக்கப்பட்ட கோயில். இதற்குப் பல வரலாற்றுச் சுவடுகள் உள்ளன. இராமாயணத்தை எழுதிய வால்மீகி, சிவனைக் கண்ட இடம்

இந்த மருந்தீஸ்வரர் கோயில். மருந்தீஸ்வரர் கோயில் மருத்துவக் குணம் கொண்ட ஒரு கோயில். இதற்கு இன்னொரு வரலாறும் தற்போது இருக்கிறது. மருந்தீஸ்வரர் கோயிலின் கிழக்கு இராஜ கோபுரத்தை எத்தனையோ மன்னர்கள் கட்ட நினைத்தார்கள்; கட்ட முடியவில்லை. எத்தனையோ முதலமைச்சர்கள் கட்ட நினைத்தார்கள்; கட்ட முடியவில்லை. 2006 முதல் 2011 வரையிலான ஆட்சியில் மாண்புமிகு முதலமைச்சர் முத்தமிழறிஞர் அவர்கள் காலத்தில்தான் இந்த இராஜ கோபுரம் கட்டப்பட்டது. இப்போதிருக்கிற ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்தான் அப்போது இந்தத் துறையின் அமைச்சர். மருந்தீஸ்வரர் கோயில் கிழக்குக் கடற்கரைச் சாலை ஆரம்பிக்கும் இடத்தில் இருக்கிறது. முத்தமிழறிஞர் அவர்களால் அந்த இராஜ கோபுரம் கட்டப்பட்டது. இன்று அந்தச் சாலைக்கு முத்தமிழறிஞர் கலைஞர் கருணாநிதி சாலை என்ற பெயரை நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சூட்டியிருப்பாரென்றால்—மிகவும் பிரசித்திபெற்ற ஒரு வரலாற்று கோயில் இது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். அதனடிப்படையில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்தத் திருத்தேரைப் புனரமைத்துத் தர இருப்பதும் இந்தத் திருத்தேர் நான்கு மாட வீதிகளிலும் வந்து முத்தமிழறிஞர் கலைஞர் கருணாநிதி சாலை வழியாக வந்து மீண்டும் கோயிலை எட்டும். பங்குனி உற்சவ பிரம்மோற்சவத்தின் ஏழாம் நாள், . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், கேள்விக்கு வாருங்கள்.*

திரு. JMH. அசன் மௌலானா: *இந்தத் திருத்தேர் ஓட்டம் நடைபெறும். தயவுகூர்ந்து இந்தத் திருத்தேரை இந்த நிதியாண்டிலே சரிசெய்து, புனரமைத்து, அலங்கரிக்கப்பட்ட புதிய தேராகத் தர வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைத் தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முத்தமிழறிஞர் காலத்தில் இராஜ கோபுரம் கட்டப்பட்டதென்று சொல்கின்றார். கூடுதலான ஒரு தகவல். அந்த மருந்தீஸ்வரர் திருக்கோயிலுக்கு முத்தமிழறிஞர்*

2022 மே 9]

காலத்தில்தான் திருமண மண்டபமும் கட்டப்பட்டது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குப் பதிவு செய்கிறேன். அதோடுமட்டுமல்லாமல், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர் குறிப்பிட்ட பங்குனி உற்சவ பிரம்மோற்சவத்தின் ஏழாவது நாள் என்பது இந்த ஆண்டு வெகு சிறப்பாக நடைபெற்றது. அந்த உற்சவத்திலே, இந்து சமய அறநிலையத் துறையின் சார்பில் நாங்களும் பங்கேற்றோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குக் கூடுதலான தகவல். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்ற பிறகு, 4–5–2022 வரையில் 13 புதிய மரத் தேர்கள் வெள்ளோட்டம் விடப்பட்டன. மேலும், 9 மரத் தேர்கள் வெள்ளோட்டத்திற்குத் தயாராக இருக்கின்றன. கடந்த ஆண்டு ரூபாய் 2 கோடி செலவில் 9 திருத்தேர்கள் புனரமைக்கப்பட்டன. இந்த ஆண்டு 14 திருத்தேர்கள் ரூபாய் 2 கோடி செலவிலே புனரமைப்பதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டிருக்கின்றார்கள். திருக்கோயில் சார்பில் இருக்கின்ற 65 தங்கத் தேர்கள், 49 வெள்ளித் தேர்கள், 891 மரத் தேர்கள் நல்ல நிலையில் இருக்கின்றன. அந்தத் திருத்தேர்கள் பாதுகாக்கப்பட வேண்டுமென்பதற்காக திருத்தேர் கொட்டகைகளுக்குக் கடந்த ஆண்டு 10 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்தார். இந்த ஆண்டும் 8 கோடி ரூபாயை ஒதுக்கீடு செய்திருக்கின்றார். ஆகவே, இந்து சமய அறநிலையத் துறையின் சார்பிலே இருக்கின்ற திருத்தேர்கள் என்றாலும் சரி, திருக்கோயில்கள் என்றாலும் சரி, நந்தவனங்கள் என்றாலும் சரி, தெப்பத் திருவிழா நடக்கின்ற குளங்கள் என்றாலும் சரி, அவற்றைப் பாதுகாக்கின்ற முதலமைச்சராக நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் இருக்கின்றார் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குப் பதிவு செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. JMH. அசன் மௌலானா அவர்கள்.*

திரு. JMH. அசன் மௌலானா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அங்கிருக்கிற கோயில் சிலைகளை எடுத்துச் செல்லும் வாகனங்களான சூரியப் பிரபை, சந்திரப் பிரபை, நாக வாகனம், யானை வாகனம் ஆகிய 4 வாகனங்களும் பழுதடைந்திருக்கின்றன. ரிஷப வாகனம் மிகவும் பிரசித்திபெற்ற ஒரு வாகனம். அது நன்றாக இருக்கிறது. இந்த 4*

வாகனங்களையும் சீர்செய்து தர வேண்டும்; இல்லையென்றால் புதிய வாகனத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அக்கோயிலுக்குத் தர வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இன்னொரு விஷயத்தையும் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அருணாச்சலபுரம், Besant Avenue-ல் நேற்றையதினம் திருவண்ணாமலை தேவஸ்தானத்திற்குப் பாத்தியப்பட்ட இடத்தில் ஒரு மூதாட்டி வீடுகட்டி வருகிறார். 90 வயதைக் கடந்த மிகவும் வயதான ஒரு மூதாட்டி வீடுகட்டி வருகிறார். அந்த மூதாட்டியிடம் அறநிலையத் துறையைச் சார்ந்த அதிகாரிகள் சென்று, இந்த இடம் case-ல் இருக்கின்றதென்றும், அங்கு வீடு கட்டக் கூடாதென்றும் கூறி, பல பிரச்சினைகளைக் கிளப்பி, அந்த மூதாட்டி மிகவும் மன உளைச்சலுக்கு ஆளாகியிருக்கிறார். ஏற்கெனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள், இது ஏழைகளுக்கான அரசாங்கம் என்று கூறினார். முதலாளிகளிடமிருந்து வணிக நோக்கத்தோடு மக்களிடமிருந்து இதை. . .

முற்பகல் 11–15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், கேள்வி சரி. இந்து சமய அறநிலையத் துறைக்குச் சொந்தமான இடத்தில் கட்ட வேண்டுமென்றால், அனுமதி வாங்கித்தான் கட்ட வேண்டும். அதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்வார்கள். (குறுக்கீடு) ஒரு நிமிடம், சொல்லுங்கள்.

திரு. JMH. அசன் மௌலானா: மாண்புமிகு அமைச்சர் அவர்கள், இது ஏழைகளுக்கான அரசாங்கம் என்பதை ஊர்ஜிதப்படுத்தும் அளவில், இதைத் தயவு கூர்ந்து, அறநிலையத் துறை அதிகாரிகளிடம் கூறி, அந்த விளிம்பு நிலையில் இருக்கும் மக்களுக்கு எந்தத் தொல்லையும் தராமல் பாதுகாக்க வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன். இதுகுறித்து, ஒரு letter-ம் இருக்கிறது. அதை இன்னும் சற்று நேரத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடமும், மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்களிடமும் நான் வழங்கவிருக்கின்றேன். கோயில் சொத்தில் வாழும் ஏழை மக்களைப் பாதுகாக்க வேண்டியது உங்கள் கடமை. ஏற்கெனவே, பாதுகாத்தவர் கலைஞர்; நீங்களும் பாதுகாக்க வேண்டுமென்று கூறி அமர்கின்றேன்.

2022 மே 9]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தத் திருக்கோயிலுக்குச் சொந்தமான 5 வாகனங்களில் ரிஷப வாகனம் நல்ல முறையில் இருப்பதாகவும், மற்ற வாகனங்கள் பழுதடைந்த நிலையில் இருப்பதாகவும் சொல்கிறார். அப்படி எந்தவிதமான தகவலும் இல்லை. ஏற்கெனவே நடைபெற்ற பங்குனி திருவிழாவில்கூட, திருத்தேரோடு சேர்ந்து அந்த வாகனங்களும் பவனி வந்தன. ஆகவே, அப்படி ஏதாவது இருப்பின், உடனடியாகச் சரி செய்து தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

கடந்த ஆண்டும், இந்த ஆண்டும் சேர்த்து சுமார் 16 கோடி ரூபாயை புதிய வாகனங்கள் ஏற்படுத்துவதற்கும், பழைய வாகனங்களைச் சீர்படுத்துவதற்கும், அந்த வாகனங்களை நிறுத்துவதற்குண்டான கொட்டகையை அமைப்பதற்கும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் இந்து சமய அறநிலையத் துறைக்கு ஒதுக்கீடு செய்துள்ளார்கள் என்ற மகிழ்ச்சியான செய்தியை மாண்புமிகு உறுப்பினர்களுக்குப் பகிர்ந்துகொள்கிறேன்.

அதே நேரத்தில், திருக்கோயில் இடங்களிலே குடியிருப்பவர்கள் வாடகைதாரர்களாக இருந்தால்தான் அவர்களுக்கு மின்சாரத் தடையின்மை சான்றிதழ் வழங்கப்படும். உறுப்பினர் கடந்த முறைகூட கேட்டார். அப்படி வாடகைதாரர்களாக இருப்பவர்கள் திருக்கோயில் இடத்தில் அவர்கள் கட்டுமானப் பணிகள் மேற்கொள்வதாக இருந்தால், அதற்கு உரிய அனுமதியைத் தர வேண்டுமென்று ஏழையெளியவரின்பால் அக்கறை கொண்ட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், 'ஏழையின் சிரிப்பிலே இறைவனைக் காணலாம்' என்ற வார்த்தைக்கு உதாரணமாக இருக்கிற மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தெரிவித்துள்ளார்கள். அப்படிப்பட்ட கட்டுமானப் பணிகளை நிறுத்துவதற்கு இந்து சமய அறநிலையத் துறையில் எந்த அதிகாரியும் முற்பட மாட்டார்கள். அவர் ஒன்று ஆக்கிரமிப்பாளராக இருப்பார்; யாருடைய அனுமதியும் இல்லாமல் அப்படி கட்டடங்கள் கட்டுகின்றபோது, இது சட்டத்தின் ஆட்சி என்பதால், நிச்சயம் சட்டத்தின்படி

வழிவகை காணப்பட்டு, நீங்கள் சொல்லியபடி, அதை இன்றைக்கே விசாரித்து, உண்மையிலே ஒரு மூதாட்டி பாதிக்கப்படுகிறார் என்றால், அதற்குண்டான தீர்வு சட்டத்தின்படி காணப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெ. முகம்மது ஷாநவாஸ் அவர்கள்.

திரு. ஜெ. முகம்மது ஷாநவாஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகப்பட்டினம் தொகுதி, திருமருகல் ஒன்றியம், திருச்செங்காட்டங்குடி கிராமத்திலுள்ள அருள்மிகு உத்ராபதீஸ்வரர் திருக்கோயில் தேர் விபத்தில் கடந்த வாரம் ஓர் இளைஞர் பலியானபோது, அடுத்த சில மணி நேரத்தில் உடனடியாக அவருக்கான நிவாரணத் தொகை அறிவித்து, எங்களுடைய மாவட்ட பொறுப்பு அமைச்சர் அண்ணன் மாண்புமிகு திரு. மெய்யநாதன் அவர்கள், சம்பவ இடத்திற்கே வந்து, அந்தக் குடும்பத்திற்கு ஆறுதல் சொல்லி, அந்த நிவாரணத்தை வழங்கினார். அதற்காக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அந்த உத்ராபதீஸ்வரர் திருக்கோயிலுக்கு வருகைத் தரக்கூடிய பக்தர்களின் வசதிக்காக நவீன தங்கும் விடுதி கட்டித் தருவதற்கு அரசு முன் வருமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தத் தேர் சக்கரத்தில் சிக்கிய திலீபன் என்பவருக்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் உடனடியாக நிவாரணத் தொகை, யாரும் கேட்காமலேயே வழங்கியிருக்கிறார்கள். நீங்கள் கேட்கின்ற தங்கும் விடுதியைப் பொறுத்தளவில், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் இந்த முறை 17 தங்கும் விடுதிகளை அமைப்பதற்கு ரூ.80 கோடியை ஒதுக்கீடு செய்திருக்கின்றார்கள். உங்களுடைய கோரிக்கையும் பரிசீலிக்கப்பட்டு, அடுத்தடுத்து வருகின்ற நிகழ்வுகளில் கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்பட்டு, சாத்தியக்கூறுகள் இருக்கின்றனவா

2022 மே 9]

என்பதை நேரடியாக வந்து கள ஆய்வு செய்து, அதன்பிறகு, நல்லதொரு தீர்வு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அனுமதியோடு காணப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 250, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. வெங்கடேசன், மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் அவர்கள்.*

250—

பால் கொள்முதல் நிலையம்

***9663—திரு. ஆ. வெங்கடேசன்:**

மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சோழவந்தான் தொகுதி, பாலமேட்டில் பால் கொள்முதல் நிலையம் மற்றும் பால் உணவுப் பொருட்கள் தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. சா.மு. நாசர், பால்வளத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

மதுரை மாவட்டம், சோழவந்தான் தொகுதி, பாலமேட்டில் பால் கொள்முதல் நிலையம் மற்றும் பாலிலிருந்து உணவுப் பொருட்கள் தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்க தற்போது சாத்தியக்கூறுகள் இல்லை என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. வெங்கடேசன் அவர்கள்.*

முற்பகல் 11–20

திரு. ஆ. வெங்கடேசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாலமேடு, மாணிக்கம்பட்டி, வெள்ளையன்பட்டி, மூடுவார்பட்டி, எர்ரம்பட்டி, தித்தூர் மேட்டுப்பட்டி, சேந்தமங்கலம், வளையப்பட்டி, பாரப்பட்டி மற்றும் தேவசேரி உள்ளிட்ட 30–க்கும் மேற்பட்ட கிராமங்களின் பிரதான தொழிலான பால் உற்பத்தி*